நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்ட பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி தலைமையில் மொழிப்போர்த் தியாகி வாரிசுக்கு ரூ.1 லட்சம் நிதி உதவி கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி வழங்கினார். 1965ஆம் ஆண்டு இந்தி திணிப்பை எதிர்த்து நடைபெற்ற மொழிப்போரில் உயிர்நீத்த தியாகிகளை நினைவு கூரும் வகையில், குமாரபாளையம் மொழிப்போர்த் தியாகிகள் நினைவுத் தூணில் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ., – டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, சிறப்புரை!

கிருஷ்ணகிரியில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

டி.செங்குட்டுவன் - இ.ஜி.சுகவனம் பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, ஜன. 30 - கழகத் தலைவர், தமிழ் நாடு முதலமைச்சர் மாண்புமிகு தளபதியார் அவர்களின் ஆணைப்படி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட மாணவர் அணி சார்பாக, மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் ஜெயேந்திரன் தலைமையில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் கிருஷ்ணகிரி 5 ரோடு ரவுண்டானாவில் பிரம்மாண்டமாக நடைபெற்றது.

மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ராமச்சந்திரன் வரவேற்புரை ஆற்றினார்.

கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேல்மணி, ஒன்றிய செயலாளர்கள் தனசேகரன், தேங்காய் சுப்பிரமணி, ராஜேந்திரன், சாந்த மூர்த்தி, மகேந்திரன், சரவணன், நாராயணன், காந்தி, மகேந்திரன், நரசிம்மன், அறிஞர், செந்தில், இளையராஜா, வசந்தரசு, எக்கூர் செல்வம், குமரேசன், ரஜினி செல்வம், பேரூர் கழக செயலாளர்கள் தம்பிதுரை, வெங்கடப்பன் , பாபு, பார்த்திபன் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் கௌதம், ஹரிஹரன், உமாவதி சத்யராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அயலக அணி மாநில தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான டாக்டர் கலாநிதி வீராசாமி மற்றும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினருமான மதியழகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இந்த கூட்டத்தில் மொழிப்போர் தியாகி தனபால் அவர்களுக்கு பொன்னாடை அணிவிற்கு பரிசுத் தொகை வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் பேசிய பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி

தமிழ்நாட்டில் தற்போது ஆளுநராக இருக்கக் கூடிய ஆர்.என்.ரவி, தமிழகம் என்று சொல்ல வேண்டும் தமிழ்நாடு என்று சொல்லக்கூடாது என கூறி வந்தார். இதை அறிந்த தமிழக முதல்வர் தளபதியார் அவர்கள் திமுக நிர்வாகிகளிடையே கூறி வருத்தப்பட்டார். அது சமயம் தமிழக முதல்வர் தளபதியார் அவர்கள் பேசியபோது பேரறிஞர் அண்ணா தமிழ்நாடு என்று பெயர் வைக்கும் நிகழ்ச்சிக்கு செல்ல கிளம்பியபோது, உங்களின் உடல்நலம் குன்றி இருக்கிறது, நீங்கள் இந்த நிகழ்ச்சிக்கு செல்ல வேண்டாம் என மருத்துவர்கள் அறிவுறுத்தினர். அதையும் தாண்டி தமிழ்நாடு என்று பெயர் வைக்கும் நிகழ்ச்சிக்கு தான் சென்று அங்கு தன்னுடைய உயிர் பிரிந்தாலும் பரவாயில்லை என கூறி அந்த நிகழ்ச்சிக்கு சென்றார். அப்படி தமிழ் நாடு என்று பெற்ற பெயரை மாற்ற நினைக்கும் ஆளுநரை கடந்த மூன்று ஆண்டுகளாக விரட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவரை நிரந்தரமாக பீகார் மாநிலத்திற்கு தமிழக முதல்வர் விரட்டுவார்

பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு கடந்த 2019 ம் ஆண்டு மீண்டும் மறைமுகமாக ரயில் நிலையங்கள் மற்றும் தபால் அலுவலகங்களில் ஹிந்தி திணிப்பை கொண்டு வந்தனர். இதை அறிந்து திமுக சார்பில் போராட்டங்கள் அறிவிக்கப்பட்டது. போராட்டம் அறிவிக்கப்பட்ட உடனேயே அந்த சுற்றறிக்கை திரும்ப பெறப்பட்டது என்றார். மேலும் தமிழ் நாட்டில் எமர்ஜென்சி காலகட்டத்தில் அப்போது தமிழக முதல்வராக இருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தன் மகனையே காவல்துறையில் இருந்து கேட்டதற்கு இணங்க அனுப்பி வைத்தார். உயிரோடு இருப்போமா இல்லையா என்று தெரிந்தே காவல் நிலையம் சென்றவர் தளபதியார் அவர்கள் . அப்படிப்பட்ட தலைவர் எங்கே? ஆனால் தற்போது ஒரு சிபிஐ விசாரணைக்கு பயந்து கடந்த ஒரு மாதமாக வெளியே வராமல் நான் தான் அடுத்த முதல்வர் என்று கூறிக் கொள்பவர்கள் எங்கே என்றார். முதலமைச்சர் பதவி என்பது அது ஒரு பதவி அல்ல அது ஒரு பொறுப்பு என பேசிய அவர், எந்தவித வேலையும் செய்யாமல் மக்களை சந்திக்காமல் நேரடியாக முதல்வராக வேண்டும் என்று கூறி வருபவர்களுக்கு இந்த பதவி ஒரு சாபக்கேடு என்று விமர்சித்தார்.

மேலும் ஜெயலலிதா இருந்தபோது தி.மு.க.விற்கு அவர் எதிரியாக தெரிந்தார். ஆனால் அவர் இறந்த பிறகு ஜெயலலிதாவே பரவாயில்லை என்ற நிலைக்கு தற்போது எடப்பாடி பழனிச்சாமி தள்ளிவிட்டார். மத்திய பாஜக அரசுடன் கூட்டணி சேர்ந்து கொண்டு தமிழக மக்களை வஞ்சித்து வருகிறார். விவசாயிகளுக்கு எதிராக மத்திய அரசு ஒரு சட்டத்தை கொண்டு வருகிறது அந்த சட்டத்தை கூட்டணியில் இருக்கக்கூடிய அதிமுக ஆதரிக்கிறது. விவசாயிகள் நண்பர்கள் என்று சொல்லிக்கொண்டு வெறும் பச்சைத்துண்டை மட்டும் கழுத்தில் போட்டுக் கொண்டு விவசாயிகளுக்கு எதிராக செயல்பட்டு வருகின்றனர். ஏனென்றால் அவர்கள் மீது ED, சிபிஐ வழக்குகள் இருப்பதால் வழக்குகளுக்கு பயந்து மத்திய அரசு கொண்டுவரும் விவசாயிகளுக்கு எதிரான சட்டம் மற்றும் குடியுரிமை திருத்த சட்டங்களுக்கு ஆதரிக்கின்றனர் என்று கடுமையாக விமர்சித்தார். குறிப்பாக குடியுரிமை திருத்த சட்டத்திற்கு எதிராக அவர்கள் ஆதரவு தெரிவித்து கையெழுத்திட்ட போது அ.தி.மு.க. கூட்டணியில் இருந்த SDPI கட்சியினர் வெளியேறினர். பிறகு SDPI கட்சியுடன் மீண்டும் கூட்டணி சேர்ந்து, அந்த கூட்டத்திலே வைத்து இனி நாங்கள் பாஜகவுடன் சேர மாட்டோம் என்று எடப்பாடி பழனிச்சாமி கூறினார். ஆனால் அடுத்த நான்கு மாதங்களிலேயே மீண்டும் பா.ஜ.க.வுடன் கைகோர்த்து தமிழக மக்களுக்கு எதிராக செயல்பட்டு வருகிறார் என விமர்சித்தார்.

இந்த கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர்கள் ஆலந்தூர் மலர்மன்னன் மற்றும் இளம் பேச்சாளர் பவித்ரா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இந்தக் கூட்டத்தில் முன்னாள் மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் சுகவனம் , மாநில தீர்மான குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ்,

மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம். வெங்கடேசன் , மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் இசை , மாநில வர்த்தக அணி துணை செயலாளர்கள் சீனிவாசன், அன்பரசன், மாநில தொழுச துணை செயலாளர் கிருஷ்ணன், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி, சந்திரன், பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கிருபாகரன், பொதுக் குழு உறுப்பினர்கள் நாகராசன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன், பாலன் , மாவட்ட செய்தி தொடர்பாளர் சீனிவாசன் மற்றும் மாவட்ட அணிகளின் தலைவர்கள் , அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் , ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள், இந்நாள் முன்னாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் பெண்கள் ஏராளமான உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கானோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்

முடிவில் மாவட்ட துணை அமைப்பாளர் மணிபாரதி நன்றியுரை ஆற்றினார் .

ஒருங்கிணைந்த கோவை மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் நடைபெற்றது. இதில் கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் தொண்டாமுத்தூர் அ.ரவி (கோவை வடக்கு), தளபதி முருகேசன் (கோவை தெற்கு), கழக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர் மகேந்திரன், துணைச் செயலாளர் ஆ.தமிழ்மறை உள்பட மாவட்டக் கழக நிர்வாகிகள் பகுதி கழக, வட்டக் கழக பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

டபுள் இஞ்சின் என்பது பம்மாத்து வேலை!

நாங்கள் 28 இஞ்சின் கொண்ட இந்தியா தான் வேண்டும் என்கிறோம்...

இரண்டு இஞ்சின் போதும் என்பதெல்லாம் பம்மாத்து வேலை..!

28 மாநிலங்களும் சேர்ந்து தான் இந்தியா எனும் ஒன்றிய அரசை இயக்க வேண்டும். மாநிலங்களின் பங்களிப்போடு ஒன்றிய அரசு செயல்பட வேண்டுமே தவிர...

ஒன்றிய அரசு நிதியில் அல்லது பங்களிப்பில் எப்படி மாநிலங்கள் செயல்பட முடியும்..?!

அந்தந்த மாநிலத்தின் மொழியையும், கலாச்சாரத்தையும், பண்பாட்டினையும், நாகரீகத்தையும், உடைகளையும், உணவு பழக்க வழக்கங்களையும், நம்பிக்கைகளையும், கல்வியையும், கடவுள்களையும், வளர்ச்சியையும் அந்தந்த மாநிலமே பாதுகாக்கவும், கட்டமைத்துக் கொள்ளவும் வேண்டுமே தவிர...

மாநிலங்களின் வண்டியை... அந்த மாநிலத்தைப் பற்றி எந்த புரிதலுமே இல்லாத, அந்த மாநில மொழியில் ஓரிரு வார்த்தைகளைக் கூட சரியாக உச்சரிக்க இயலாத அல்லது உச்சரிக்க விரும்பாத ஒன்றிய அரசு நிர்வாகிகள் எப்படி தங்கள் இஞ்சினைக் கொடுத்து ஓட வைக்க முடியும்..?!

இரண்டு இஞ்சின் சர்க்கார். அல்லது டபுள் இஞ்சின் சர்க்கார் என்பதே மாநில சுயாட்சியை அழித்து ஒழித்து. மாநிலங்களின் லகானை தங்கள் கரங்களில் வைத்துக்கொள்ளும் ஒரு கேடு கெட்ட உத்தியாகவே தான் கணிக்க முடியும்.

டபுள் இஞ்சின் சர்க்கார் என்றால். தமிழ்நாட்டில் இந்தி திணிக்கப்படும், தமிழ் படிப்படியாக வழக்கொழிந்து போகும், காத்தாயம்மனும், பேச்சியம்மனும், வீரனும், சுடலை மாடனும், அய்யனாரும், காத்தவராயனும், லக்ஷ்மி, சரஸ்வதி, ராமர், கிருஷ்ணர்களால் முழுமையாக மூடி மறைக்கப்படுவார்கள்..!

டபுள் இஞ்சின் சர்க்கார் மாநிலத்தில்... திருப்பூர் குமரனும், வ.உ.சி.யும், வேலு நாச்சியாரும், காந்தியடிகளும், நேருவும் இன்னபிற உண்மையான சுதந்திர போராட்ட தியாகிகளை ஆங்கிலேய துதிபாடிகள் என்று பறைசாற்றி சாவர்கர்களும், கோல்வாக்கர்களும் தான் தேசப்பிதாவாக கற்பிக்கப்படுவார்கள்..!

டபுள் இஞ்சின் சர்க்காரை ஏற்றுக்கொண்டால்... கீழடியும், பொருநைகளும் வெறும் சுடுகாடுகளாக அல்லது இடுகாடுகளாக சித்தரிக்கப்பட்டு.... இந்தியாவின் வரலாறு, இல்லவே இல்லாத சரஸ்வதி நதி நாகரிகத்தில் இருந்து ஆரியர்களால் வளர்த்தெடுக்கப்பட்டதாக உலக அரங்கில் பதிவு செய்யப்படும்..! தமிழர் என்ற இனமே, தமிழை தாய் மொழியாகக் கொண்டு தமிழை வேர் மொழியாகக் கொண்டு உருவான பல்வேறு மொழிகளின் ஒட்டுமொத்த திராவிட இனமே, சுய அடையாளத்தை இழந்து, இந்து சனாதனத்தின் இன்னுமொரு அடிமை இன முகமூடியோடு வலம் வர வேண்டியிருக்கும்..!

டபுள் இஞ்சின் சர்க்கார்.... மருத்துவம், பொறியியல், மென்பொருள், வணிகம், கணக்கியல் உள்ளிட்ட உயர் கல்விகளை இந்தியா முழுமைக்கும் பொதுமைப்படுத்தி... அவற்றை , ஒரு சில உயர் சாதியினரும், சில பல பெரும் பண முதலைகளும் மட்டுமே பயிலும் ஒன்றாக மாற்றப்படும்.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால், நம்ம ஊர் அனித்தாக்களுக்கும் மருத்துவக் கல்வி வசமானதை தடுத்து 'நீட்' என்ற தேர்வின் மூலம் அங்கிதா சிங்குகளுக்கு தாரை வார்க்கப்படுவதை, இந்த டபுள் இஞ்சின் சர்க்காரால் தடுக்க முடியுமா..?! இஞ்சின் மாநிலத்தின் கரங்களில் மட்டும் இருந்தால் தான் நீட் விலக்கப்படும்.... மீண்டும் அனித்தாக்களும், அங்கம்மாள்களும், தமிழரசன்களும் மருத்துவம் பயில முடியும்..!

இங்கே டபுள் இஞ்சின் சர்க்கார் இருந்த வரையிலும், கூலி வேலை தேடி மகாராஷ்டிரா போன்ற வட மாநிலங்களுக்குச் சென்று கொண்டிருந்த தமிழர்கள், மாநில சுயாட்சி பேசிய சிங்கிள் இஞ்சின் சர்க்கார் வந்த பிறகு தான் படிப்படியாக வெளி நாடுகளுக்கு... மருத்துவர்களாகவும், பொறியாளர்களாகவும், மென்பொருள் வல்லுநர்களாகவும், கணக்கியல் வல்லுநர்களாகவும் செல்லக்கூடிய நிலை உருவாகியுள்ளது.

இன்றைக்கு உச்சக்கட்டமாக, டபுள் இஞ்சின் சர்க்கார் நடந்து வரும் அந்த வட மாநிலத்தவர்கள், கூலி வேலைக்காக சாரை சாரையாக தமிழ்நாடு நோக்கி வரும் சூழல் உருவாக்கப்பட்டிருக்கிறது..!

வரி வருவாய்கள் அந்தந்த மாநிலங்கள் வசம் தானே இருக்க வேண்டும்..?! அது தானே நியாயம்?! அப்படியான ஒரு மாநில சுயாட்சி நிலை இருந்திருந்தால்.

சிங்கிள் இஞ்சின் சர்க்காராக இருக்கக் கூடிய தமிழ்நாட்டின் இன்றைய பொருளாதார வளர்ச்சிக்கு... ஒன்றிய அரசுக்கு, அதன் பொருளாதாரம், வெளியுறவு, பாதுகாப்பு மற்றும் இன்னபிற சுய சேவை தேவைகளுக்காக வருடத்திற்கு ஒரு லட்சம் கோடி ரூபாயை தனது பங்களிப்பாக தமிழ்நாடு வழங்கிக் கொண்டிருந்திருக்கும்!

தேவைக்கும் அதிகமான கனிம வளம், அறிவு சார் மனித வளம், சிறு குறு தொழில்கள் உட்பட மத்திய தர, மிகப்பெரும் உலக நிறுவனங்களின் தொழில் வளம், பெரும் உழைப்பு, கல்வி என்று கடந்த அரை நூற்றாண்டாக சிங்கிள் இஞ்சின் சர்க்கார் மூலமாக செதுக்கிச் செதுக்கி வளர்ந்து நிற்கும் தமிழ்நாடு

தன்னுடைய சொந்த வரி வருவாயிலிருந்தே, மின் கட்டணங்களை இப்பொழுது இருப்பதை விட பாதியாகக் குறைத்திருக்கும், குக்கிராமம் வரையிலான சாலைகள் உலக தரத்திற்கு மேம்படுத்தியிருக்கும், நூறு நாள் வேலை திட்டத்திற்கு சுதந்திர போராட்ட தியாகி வீர மங்கை வேலுநாச்சியார் பெயரோடு 200 நாட்களுக்கு அதுவும் 500 ரூபாய் ஊதியத்தோடு கொடுத்திருக்க முடியும், இன்னும் 100 அரசு மருத்துவக் கல்லூரிகளும், அதனைச் சார்ந்த மருத்துவமனை களும் கூட உருவாகியிருக்கும், உலகின் ஆகச் சிறந்த தொழில் நிறுவனங்கள், குஜராத் உள்ளிட்ட வட மாநிலங்களுக்குச் செல்லாமல், ஆவலுடன் தமிழ்நாட்டுக்கு வந்து கோடிக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு உயர் ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பு உருவாகியிருக்கும்

சௌமியன்
வைத்தியநாதன்
கழக இலக்கிய அணி துணைச் செயலாளர்

இன்னும் அடுக்கிக் கொண்டே செல்லலாம் ஆனால் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், சிங்கப்பூர் தலைவர்கள் இந்தியாவில் உள்ள தமிழ்நாட்டினைப் போன்று சிங்கையை இன்னமும் தரம் உயர்த்த வேண்டும் என்று அவர்கள் கவுன்சிலில் விவாதித்திருப்பார்கள்!

ஆம், இது வெறும் வார்த்தை விளையாட்டு அல்ல. பேரறிஞர் அண்ணாவின் மாபெரும் தமிழ்க் கனவு இது! இவை அனைத்துமே மாநில சுயாட்சி என்ற ஒன்றை அடைந்தால் மட்டுமே சாத்தியமாகும். அதை விடுத்து.. டபுள் இஞ்சின் சர்க்கார் என்ற மாபெரும் சுழலில் மாட்டிக் கொண்டால், இப்பொழுது நாம் கட்டி கொண்டிருக்கும் கோவணத்தையும் கூட அவர்கள் உறுவி விட்டு... நம்மை கூலி வேலைகளுக்கு வடமாநிலங்களுக்கு மீண்டும் படையெடுக்க வைத்து விடுவார்கள்..!

ஸோ.. மாநிலத்தின் சுயாட்சி எனும் சிங்கள் இஞ்சின் சர்க்காரும்.. இந்த சிங்கிள் இஞ்சின் சர்க்கார்கள் எல்லாம் சேர்ந்து கூட்டாக ஒன்றிய அரசினை இயக்கும் ஒன்றிய கூட்டாட்சியுமே, உண்மையான வளர்ச்சியை மக்களுக்கு அளிக்கும் என்பதை புரிந்து கொண்டு..

மீண்டும் சிங்கிள் இஞ்சின் திராவிட மாடல் 2.0 ஆட்சி தொடர வாக்களிப்போம் என்று உறுதி ஏற்போம்..!

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. தமிழ் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் சீர்காழியில் நடைபெற்றது. பொதுக் கூட்டத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சரும், கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினருமான எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் சிறப்புரை ஆற்றினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் தலைமைக் கழக பேச்சாளர் ம.க.சூர்யா, சீர்காழி நகர கழக செயலாளர் ம.சுப்பராயன், மாவட்ட கழக அவைத் தலைவர் கே.ஜி. சீனிவாசன், பொருளாளர் மகா. அலெக்சாண்டர் மற்றும் பலர் உள்ளனர்.

கோவை மாநகர் மாவட்ட மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் தலைமையில் மாநகர் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சிவபிரகாசம் வரவேற்புரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக மாணவர் அணி செயலாளர், வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி சிறப்புரையாற்றினார். இதில் கழக தீர்மானகுழு செயலாளர் நா.கார்த்திக், மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி, நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப. ராஜ்குமார், மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், மாநில நிர்வாகிகள் வழக்கறிஞர் அருள்மொழி, மீனா ஜெயக்குமார், தமிழ்ச்செல்வன், நாச்சிமுத்து, கோகுல், முரா.செல்வராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.